# உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம்

UMAR PULAVAR TAMIL LANGUAGE CENTRE

# பயணம்

மாணவர் இதழ்

**ஏப்ரல் 2017**


**தொடர்புக்கு:**

2, பீட்டி சாலை,
சிங்கப்பூர் 209954

62980781

**இணையப் பக்கம்:**
www.uptlc.moe.edu.sg


**2017-ஆம் கல்வியாண்டுக்கான விவரங்கள்**

புதிது

பார்க்க: இணையப் பக்கம்

## உள்ளே...


| உள்ளே... | பக்கம் |
|---|---|
| தமிழ்மொழி விழா 2017 | 1 |
| தமிழின் சிறப்பு | 1 |
| படிப்பது எப்படி? | 1 |
| முக்கிய நிகழ்வுகள் | 1 |
| பெண்மையைப் போற்றுவோம் | 1 |
| அழகுதமிழ் அறிவோம் | 1 |
| மாதிரிக் கட்டுரை | 2 |
| மாணவர் படைப்புகள் | 1-3 |
| ஒற்றுமையே பலம் | 3 |
| குறுக்கெழுத்துப் புதிர் விடை | 3 |
| தமிழ்மொழியின் தனிச்சிறப்புகள் | 3 |


## முக்கிய நிகழ்வுகள்

- **SA1 Exams Paper 1&2**
  *ஏப்ரல் 3 - 22*
- **E-Learning Day**
  *ஏப்ரல் 24-25*

## தமிழ்மொழி விழா 2017

தமிழ்மொழி விழா 2017 வழக்கம்போல் சிங்கப்பூரில் ஏப்ரல் மாதம் முழுவதும் நடைபெற்று வருகிறது. நாற்பதிற்கும் மேற்பட்ட அமைப்புகள் ஐம்பதிற்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளை நடத்துகின்றன. சிறுவர், இளையர், பெரியவர் என்று எல்லாத் தரப்பினரையும் ஈர்க்கும் பல்வேறு நிகழ்ச்சிகள் தீவுமுழுவதும் நடைபெற்று வருவது அறிந்த ஒன்றே.

தமிழ்மொழியின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் வளர்தமிழ் இயக்கம் முனைப்போடு செயல்பட்டு வருவது பாராட்டக் கூடியது. அரசின் ஆதரவு தமிழுக்கு இருந்தாலும் மக்களின் ஆதரவு தமிழுக்கு இருந்தால்தான் தமிழ் வாழும் மொழியாக நிலைத்து நிற்கும். இளையர்கள் இந்நிகழ்ச்சிகளில் பெருமளவில் பங்கேற்பதும் நிகழ்ச்சிகளை வழிநடத்திச் செல்வதும் தமிழ்மொழி சிங்கப்பூரில் தலைமுறை கடந்தும் வாழ வழிவகுக்கும்.

*இப்படிக்கு...*
**இதழ்க் குழு**

## பொன்மொழி



நமது பிறப்பு
ஒரு சம்பவமாக இருக்கலாம்!
ஆனால்...
நமது இறப்பு
ஒரு சரித்திரமாக
இருக்க வேண்டும்.

## படிப்பது எப்படி?

**தேர்வைக் கண்டு பயப்படவோ வெறுக்கவோ கூடாது.**

**நல்ல மதிப்பெண் பெற முடியும் என்ற நம்பிக்கையுடன் படிக்க வேண்டும்.**

**ஒவ்வொரு பாடத்திற்குமான நேரத்தை வகுத்துக்கொண்டு படிக்க வேண்டும்.**

தொடரும்...

## தமிழின் சிறப்பு!

தன்னிலிருந்து மலர்ந்து வரும் ஒலி என்பதைக் குறிப்பிடும் தம் இழ் என்ற சொல்லே தமிழ் என ஆயிற்று என்றும், தகுதியான பேச்சு முறை என்பதைக் குறிக்கும் தம் மிழ் என்ற சொல்லே தமிழ் என ஆயிற்று எனவும் செக் நாட்டு அறிஞர் கமில் சுலவெபில் கூறியுள்ளார்.

தமிழ்

வன்மையான ஓசை உடைய எழுத்துக்கள், மென்மையான ஓசை உடைய எழுத்துக்கள், இரண்டிற்கும் இடைப்பட்ட ஓசை உடையவை என்பதை உணர்த்தும் வகையில் தமிழின் மெய்யெழுத்துக்கள் வல்லினம், மெல்லினம், இடையினம் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. (கசடதபற வல்லினம், ஙஞணநமன மெல்லினம், யரலவழள இடையினம்)

ஒவ்வொன்றிலிருந்தும் ஓர் எழுத்தை எடுத்து (த வல்லினம், மி மெல்லினம், ழ் இடையினம்), **தமிழ்** என மொழிக்குப் பெயரிடப்பட்டுள்ளது.

உலகில், பெயரைக் கொண்டே மொழியின் தன்மையை அறியும் பெயர் வேறு எந்த மொழிக்கும் கிடையாது.

## பெண்மையைப் போற்றுவோம்!

பெண்மை என்ற தலைப்பில் மகாகவி பாரதியார் பல கவிதைகளை எழுதியுள்ளார். பெண்ணின் முக்கியத்துவம், பெண்ணுரிமை போன்றவற்றைக் கவிதைகள் மூலமாக மக்களுக்குத் தெரிவித்துள்ளார். ‘மனதில் உறுதி வேண்டும்’ என்ற கவிதையில் ‘பெண் விடுதலை வெண்டும்’ என்று துடிப்புடன் பாடினார். ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சுதந்திரமும் சமவுரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்று உறுதியாக நம்பினார். பாரதியார் பெண்களைப் புகழ்ந்து பாடுவதை அவர்தம் கவிதைகளில் காணலாம். அவர் தொடங்கி வைத்த பெண்ணியச் சிந்தனை பலரது படைப்புகளிலும் பாடுபொருளாக இடம்பெற்றதோடு, பெண்ணியச் சிந்தனை வளரவும் வழிவகுத்தது. பெண்மையைப் போற்றுவோம்! மண்ணுலகம் பயனுற வாழ்வதற்கு!

**ஸஃபானா ஆயிஷா(3HT1)**

## அழகுதமிழ் அறிவோம்!

**OPERATION**
**அறுவை சிகிச்சை**

**CLINIC**
**மருந்தகம்**

**மாணவர்களின் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன.**

**‘பயணம்’ மாணவர் இதழ் தயாரிக்கும் குழுவில் பணியாற்றுவதற்கு ஆர்வமுள்ள மாணவர்கள் வரவேற்கப்படுகின்றனர்.**

## மாதிரிக் கட்டுரை

### எதிர்பாராத வகையில் முடிந்த ஒரு சம்பவம்.

சன்னல் ஓரம் அமர்ந்திருந்த என்மேல் மழைத்துளி விழுந்தது. பஞ்சபூதங்களில் இரண்டான மழையும் காற்றும் ஒன்று சேரும் அழகைப் பார்க்கும்போது என் மனத்தின் ஏதோ ஒரு மூலையில் இருந்த ஞாபகங்கள் என் கண்முன் நிழலாடின…

சென்ற மாதம் பதினைந்தாம் தேதி நானும் என் குடும்பத்தினரும் இந்தியாவில் இருந்து சிங்கை புறப்படும் நாள். அன்று மதியம் நாங்கள் விமானத்தில் ஏறுவதாக இருந்தது. நான் அதை ஆவலோடு எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தேன். என்னுடைய நாட்டுக்கும் என்னுடைய வீட்டுக்கும் திரும்பப் போகிறோம் என்ற ஆனந்தம் என் முகத்தில் தாண்டவம் ஆடியது. சிங்கை சென்றதும் நான் என்ன செய்யப்போகிறேன் என்பதை யோசித்தபடி என் வீட்டு மொட்டைமாடிக்குச் சென்றேன். சிலுசிலுவென அடித்த காற்று என்னை நடுநடுங்க வைத்தது. என் கைகளைக்கொண்டு என் உடம்பை மறைத்தபடி அண்ணாந்து பார்த்தபோது சாம்பல் நிற முகில்கள் பொலிவுமிக்க சூரியனை மறைத்துக்கொண்டு இருந்தன.

மழை பெய்யப்போகிறது என்பதை உணர்ந்துகொண்ட நான் விரைந்து வீட்டுக்குள் ஓடிச்சென்று மழை வரப்போவதாக என் பெற்றோர்களுக்குத் தெரிவித்தேன். அவர்களும் சற்று நேரத்தில் மழை நின்றுவிடும் என்ற நம்பிக்கையில் அதை அலட்சியமாக விட்டுவிட்டார்கள். பிறகு அவர்கள் ஊருக்குச் செல்வதற்குத் தேவையான பொருட்களை எடுத்து வைத்துவிட்டு வீட்டிலிருந்து விமான நிலையத்திற்குச் செல்வதற்கான நேரத்தைக் கணக்கிட்டுக் கொண்டிருந்தார்கள். அங்கிருந்து விமானநிலையத்திற்குச் செல்வதற்கு ஒரு மணிநேரந்தான் தேவைப்பட்டது. ஆகையால் அவர்கள் சற்று நேரம் கழித்தே கிளம்பலாம் என்று நினைத்தார்கள். எனக்கென்னவோ மழை விடும் என்று தோன்றவில்லை. நான் இதைப்பற்றிச் சொல்ல முற்பட்டேன். ஆனால் அவர்கள் நான் சொல்வதைக் காது கொடுத்து கேட்கவில்லை. நான் மறுபடியும் சிங்கை சென்றதும் செய்யப்போகும் செயல்களைப் பற்றி எண்ணியபடி நினைவலைகளில் மூழ்கினேன். சற்று நேரம் கழித்து நாங்கள் விமான நிலையத்திற்குச் செல்வதற்காக ஒரு வாடகை உந்துவண்டியை அழைத்து இருந்தோம். அப்பொழுதும் வானைப் பிழந்து கொண்டு மழை கொட்டியது. அது மட்டும் இல்லாமல் காற்றும் மிகப் பலமாக அடித்துக்கொண்டு இருந்தது. என்வீட்டுக்கு அருகில் இருந்த மரங்கள் யானையின் தும்பிக்கையைப்போல் ஆட ஆரம்பித்தன. அப்பொழுது தான் என் தந்தையின் கைதொலைபேசிக்கு ஒரு தகவல் வந்தது. இன்னும் வெகுநேரத்திற்கு மழையும் காற்றும் அதிவேகத்தில் இருக்கும் என்றும் வீட்டை விட்டு வெளியே வருவது ஆபத்து என்று வானிலை அறிக்கை கூறுவதாக ஒரு செய்தி வந்ததால் தொலைக்காட்சி செய்தியைப் பார்க்க அவர் விரைந்தார். செய்திகளில் 'வர்தா' புயல் என்ற புயல் கடலின் நடுப்பகுதியில் இருந்து கரைக்கு வந்துகொண்டிருப்பதாகவும் அது இன்றிரவு கரையைக் கடந்துவிடும் என்றும் இந்தப் புயலால் பல பாதிப்புகள் ஏற்படக்கூடும் என்றும் அறிவித்தார்கள். அதைப் பார்த்ததும் என் குடும்பத்தினர் அனைவரும் குழம்பிப் போனோம். அதற்குள் நாங்கள் அழைத்திருந்த வாடகை உந்துவண்டி வந்துவிட்டது. எப்படியாவது சிக்கலைச் சந்திக்காமல் சிங்கையைச் சென்றடையவேண்டும் என்று நாங்கள் எண்ணியபடி உந்து வண்டியில் பெட்டிகளை எடுத்து வைத்துக்கொண்டு புறப்பட்டோம்.

அப்பொழுது ஓட்டுநர் எங்களிடம் நீங்கள் தடையின்றி விமான நிலையத்திற்குச் செல்வது என்பது சிரமமான காரியம் என்று கூறினார். என்ன நடக்கப்போகிறது என்ற பயம் எங்கள் மனத்தை ஆட்கொண்டது. நாங்கள் என்ன செய்வது என்று அறியாமல் இயற்கையின் போக்கில் விட்டுவிட்டோம் சிறிது தூரத்துக்குப் பிறகு சாலையில் நெரிசல் ஏற்பட்டு இருந்தது. சாலையில் பல மரங்கள் விழுந்து கிடந்தன. இதனால் எந்த வாகனத்தாலும் முன்னேறிச் செல்லமுடியவில்லை. ஆகையால் நாங்கள் சற்று நேரம் அங்கு காத்திருந்தோம். அப்பொழுது காற்றின் வேகமும் மழையின் அளவும் அதிகரித்துக்கொண்டே சென்றது.

அப்பொழுது "டமால்" என்று ஒரு சத்தம் எங்கள் காதுகளை எட்டியது. அது என்னவென்பதை அறிவதற்காக உந்துவண்டி சன்னலை இறக்கி எட்டிப் பார்த்தபோது சாலையோரத்தில் இருந்த ஒரு தள்ளுவண்டி ஒரு மூன்று வயதுக் குழந்தையின் மீதும் ஒரு தாயின் மீதும் விழுந்து கிடந்தது. அந்தக் காட்சியைக் கண்ட என்னால் அமைதியாக உட்கார்ந்து கொண்டு வேடிக்கை பார்க்க முடியவில்லை. என் தந்தையும் நானும் உந்துவண்டியைவிட்டு இறங்கி அந்த இடத்துக்கு ஓடிச்சென்று அந்தத் தள்ளுவண்டியைத் தூக்க முயன்றோம். ஆனால், எங்களால் அதைத் தூக்க முடியவில்லை. அப்பொழுது இன்னும் இரண்டு இளையர்கள் தள்ளுவண்டியைத் தூக்க எங்களுக்கு உதவினர். தாயையும் குழந்தையையும் அங்கிருந்து விடுவித்தோம். பிறகு நான் அந்தப் பெண்மணிக்கு உதவி செய்தேன். அப்பொழுது அவர் என் கைகளைப் பிடித்துக் கண்களில் நீர் மல்க நன்றி கூறினார்.

நான் அவரிடம் உங்களுடைய வீடு எங்கிருக்கிறது என்பதை வினவியபோது அடித்த புயல் காற்றினால் அவருடைய சிறிய குடிசைப்பகுதி பாதிக்கப்பட்டுவிட்டது என்றும் இப்பொழுது தஞ்சம் புகக்கூட இடம் இல்லாமல் திண்டாடுகிறோம் என்றும் கூறினார். அதைக்கேட்ட எனக்கு என்ன செய்வது என்று புரியவில்லை உடனே என் சட்டைப்பையில் இருந்த இரண்டாயிரம் ரூபாயைக் கொடுத்தேன். ஆனால் அவர் அதை வாங்கிக் கொள்ள மறுத்துவிட்டார். உடனே அவரின் குழந்தையின் கையில் கொடுத்து அம்மாவிடம் கொடுக்குமாறு சொல்லிவிட்டு அவர்களிடம் இருந்து விடைபெற்றுக்கொண்டு உந்துவண்டியில் ஏறினேன். பிறகு என் தாயாரிடம் நடந்ததைக் கூறினேன். அவர் நான் செய்த செயலுக்காக என்னைப் பாராட்டினார்.

இதற்கிடையில் புயல் ஏற்பட்டதால் விமானங்கள் எல்லாம் அடுத்த நாள் தான் புறப்படும் என்று அறிக்கை ஒன்றை வெளியிட்டு இருந்தார்கள். ஆகையால் நாங்கள் விமானநிலையத்திற்கு அருகில் இருந்த விடுதியில் தங்கிவிட்டு அடுத்த நாள் சிங்கை வந்தடைந்தோம். இந்தச் சம்பவம் எப்பொழுதும் போல் விமானத்தில் ஏறினோமா, சிங்கை வந்தோமா என்று முடிந்திருக்கவேண்டிய ஒன்று. ஆனால், நடந்ததோ வேறு. மழையைப் பார்க்கும் போதெல்லாம் ஞாபகத்திற்கு வரும் ஒரு முக்கியமான சம்பவமாக அது அமைந்துவிட்டது.

**பூர்வசந்தியா 2HT1**

### நண்பனாய்…

என்னைவிட
நல்ல நண்பன் கிடைத்தால்
என்னைக் கடந்து செல்…
தடுக்க மாட்டேன் - ஆனால்
அவன் உன்னைவிட்டு
விலகிச் சென்றால்…
பின்னால் திரும்பிப் பார்!
உனக்காக நானிருப்பேன்
எப்போதும் நல்ல நண்பனாய்!

**சரித்ரா 3HT1**

### என்ன?



என்ன எழுதுவதென்று
எதுவும்
தெரியவில்லை…
என்ன சொல்வதென்று
ஏதும் அறியவிலலை…
என்ன செய்வதென்று
எனக்கும் புரியவில்லை…
ஏதாவது செய்யென்று
ஏதோ சொல்வது மட்டும்…
காதுகளில் ரீங்காரமாய்
இசைக்கின்றது.

**அபிஷா 2HT1**

### விசித்திரம்

உலகம்
ஒரு விசித்திரமான கல்லூரி
இங்கே பாடம் கற்பித்து
தேர்வு வைப்பதில்லை!
தேர்வு வைத்த பின்னரே
பாடம் கற்பிக்கப்படுகிறது.

**சரித்ரா 3HT1**


### சிறப்பு!

எனக்குப் பிடித்த நிறம் சிவப்பு!
எனக்குப் பிடிக்காதது பழுப்பு!
முகத்தில் தோன்றும் சிரிப்பு!
வாழ்க்கைக்கு அதுவே சிறப்பு!

**ரித்திகா 2HT2**

### கைத்தொலைபேசி

மலர்போல் மலர்ந்தது
என் முகம்!
மயில்போல் ஆடியது
என் மனம்!
குடையாய் விரிந்தது
புன்னகை!



கோபுரமாய்
உயர்ந்தன
என் கைகள்!
சிறுத்தையாய் ஓடின
என் கால்கள்!
என் புதிய
கைத்தொலைபேசியை
காண்பதற்காய்!

**ஆனிசஃப்ரின் 2HT1**

## ஒற்றுமையே பலம்!

'நான்தான் மூலிகைத் தோட்டத்தின் பக்கத்தில் இருக்கும் தூண் பேசுகிறேன்.' 'அப்படியா, நான் தான் கபடித் திடலுக்குப் பக்கத்தில் இருக்கும் தூண். நீ பேசுவதை என்னால் நன்றாகக் கேட்க முடிகிறது.'

அந்த இரவில் உமறுப்புலவரின் இரண்டு தூண்கள் பேசும் ஒலி மென்மையாக மற்றத் தூண்களுக்கும் கேட்டது. தமிழ் வளர்க்க இந்நிலையம் எடுக்கும் முயற்சிகளை நாளும் நாம் பார்க்கிறோம் என்று கூறிய கபடித் திடலையொட்டிய தூணின் முகத்தில் மகிழ்ச்சி கரைபுரண்டோடியது.

மூன்றாவது மாடியில் உள்ள தூணுக்குச் சரியாகக் கேட்காததால், 'இரண்டாவது மாடித் தூணே, கபடித் திடலுக்கருகில் உள்ள தூண் என்ன சொன்னது?' என்று கேட்டது.

உடனே, இரண்டாவது மாடித்தூண் மூன்றாம் மாடித் தூணிடம் 'நீயும் நானும் மற்ற எல்லாத் தூண்களும் தமிழ் வளர்க்க உதவினோம்' என்று கபடித் திடல் தூண் கூறியது எனச் சொன்னது.

அதைக் கேட்டதும், மூன்றாவது மாடித்தூண் ஆனந்த வெள்ளத்தில் 'எல்லோரும் கொண்டாடுவோம்!' என்று பாடத் தொடங்கியது.

தமிழ் வளர்க்கத் தூணாக இருந்ததற்கு நான் பெருமைப்படுகிறேன் என்றது இரண்டாவது மாடித் தூண். நானுந்தான், நானுந்தான், நானுந்தான் என நிலையத்தின் எல்லாத் தூண்களும் இனிமையான குரலில் இசைபாடத் தொடங்கின.

பலர் ஒற்றுமையுடன் இருந்து இன்றுவரை வளர்த்த தமிழ் வாழ்வாங்கு வாழவும் வளரவும் வழி என்ன? என்று கேட்டது கணினிக்கூடத்தின் பக்கத்திலிருந்த தூண். இங்குப் படிக்கும் மாணவர்கள் யாவரும் கணினித் தமிழ் கற்றுத் தமிழை வாசித்தும் நேசித்தும் பேசியும் தமிழுணர்வோடு வாழ வேண்டும். மேலும், தமிழின் உயர்வு நோக்கி ஒவ்வொருவரும் உழைத்தால்... எதிர்காலத்தில் மட்டுமல்ல, எக்காலத்திலும் தமிழ் நிலைத்திருக்கும் என்று எட்டிப் பார்த்துச் சொன்னது கீழ்த்தளத்திலிருக்கும் திருவள்ளுவர் சிலை.

தமிழுக்கு உண்மையான தூண்கள் இங்குப் படிக்கும் மாணவர்களே என்றன நம்மை வரவேற்க நிலைய முகப்பில் நிற்கும் மா, வாழை, பலா ஆகிய முக்கனிகளின் மரங்கள்.

மகிழ்ச்சியில் அனைத்தும் தம்மை மறந்து பேசிக்கொண்டிருந்த பொழுது இனிமையான சங்கீதம் காற்றில் மிதந்து வந்தது.

**தமிழோடு வளர்வோம்! தமிழோடு வாழ்வோம்!**

முனைவர் சந்தன்ராஜ்

## தங்கை



எனக்கொரு தங்கை இருக்கிறாள்
இன்முகம் காட்டிச் சிரிக்கிறாள்!
தனக்கென ஒருலகம் வைத்துள்ளாள்
தனியே அதனுடன் வாழ்கின்றாள்!
அவளைப் பார்த்து அழைத்ததும்
அன்பாய் ஓடி வருகின்றாள்!
களைத்து வரும் வேளையிலே
கரும்பாய் எனக்கு இனிக்கின்றாள்!
இவளைப் போன்ற தங்கைக்கு
இணையும் உண்டோ இவ்வுலகில்!

**அயிஷா 2HT1**

## தமிழ்மொழியின் தனிச்சிறப்புகள் ஐந்து

(1) இனிய மொழி, எளிய மொழி, சிறந்த மொழி, பழைய மொழி, தனித்த மொழி என்ற ஐந்து அடைமொழிகளுக்கும் தமிழ் ஒன்றுதான் தகுதியானது.

(2) ஐயாயிரம் ஆண்டுகளுக்குமுன்பே இலக்கணம் பெற்றது இம்மொழி.

(3) கண்ணால் காணப்படாத, மனத்தால் நினைக்கப்படுகின்ற பொருள்களுக்கும் இலக்கணம் கூறுகின்ற அகப்பொருள் இலக்கணத்தைக் கொண்டது.

(4) பிற மொழிகளில் காணப்படாத 'ழ' என்று ஒலிக்கும் எழுத்தைக் கொண்டது.

(5) ஒழுக்கத்தை மட்டும் வற்புறுத்திக் கூறும் தனி நூல்கள் பலவற்றைக் கொண்டது.

— கி. ஆ. பே. விஸ்வநாதம்.

## சென்ற மாதக் குறுக்கெழுத்துப் புதிர் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ ❶ | ண | வ ❸ | ம் | | | பொ ❻ | | உ ❺ |
| | | ண | | | | று | | ண |
| | | க் | | | | ப் | | வ |
| | | க ❷ | ன | வு | | பு | | க |
| | | ம் | | | | | | ம் |
| | | | தி ❹ | ட் | ட | வே | லை | |
| | | | | | | | | ணி |
| க ❽ | ணி | னி | க் | கூ | ட | ம் | | ப ❼ |

## தனிசுகம்!



தூக்கம் கண்ணுக்குள் நிற்கிறது
தூங்கவிட்டால் தூங்கிடுவேன்.
பாடத்தின் சுமை ஒருபக்கம்...
படி! படி! என்ற
நச்சரிப்பு மறுபக்கம்...
உதவி கேட்கும் தங்கைக்கும்
உண்ண அழைக்கும் அம்மாவிற்கும்
ஒதுக்க நேரம் இல்லையே!
அடிக்கடி வரும் குறுந்தகவல்
அதற்கு மட்டும் இடமுண்டு!
அதிலே தனித்த சுகமுண்டு!

**ஜஸ்லின் 2HT2**

## நம்பிக்கை!

**நரம்புகள் தளரலாம்**
**ஆனால்...**
**நம்பிக்கை தளரக்கூடாது!**

**வரதராஜ் 3HT1**

## என் குடும்பம்

எல்லாரும் கலைநிகழ்ச்சிக்குச் செல்வார்கள்
எப்படியோ காசையெல்லாம் தொலைப்பார்கள்
அப்படியெல்லாம் செல்ல வேண்டாம்!
என் வீட்டைத் தேடி வாருங்கள்
விதவிதமாய்ப் பாடலைக்
கேளுங்கள்!
தங்கை ஒருபுறம் தொடங்கி வைக்க
அண்ணன் அதற்குப் பின்பாட்டுப் பாட...
அப்பாவும் அம்மாவும் தாளம்போட
தாத்தா பாட்டி தனியே ஆட
குடும்பமே குதுகலந்தான்!



**ஜஸ்லின் 2HT2**

## டிக் டிக்...கனவு!

நொடிகள் ஓடும்
டிக்.. டிக்.. டிக்..
மனம் தாளம்போடும்
டக்..டக்..டக்..



இதயம் பாடும்
லப்..டப்.. லப்..டப்..
தேர்வில் பேனா ஆடும்
சர்..சர்..சர்
ஆசிரியர் கொடுப்பார்
கடைசி நிமிடம்!

கைகள் துள்ளும்
எழுதித் தள்ள...ஆனால்
நனவுகள் கனவாக...
நான் வெளியே செல்வேன்!

**ஆனிசஃப்ரின் 2HT2**

## மழை!



மேகமே!
யார் உன்னை
என்ன செய்தார்கள்?
ஏன் இப்படி அழுகின்றாய்?
நல்லதுதான்!
நீ அழுதால்தான்
நாங்கள் சிரிக்க முடியும்!

குறும்புக்கார மழையே!
சிறுகுழந்தையைக் கிள்ளிவிட்டு- பின்
சமாதானப்படுத்துவது போல...
வரும் முன்னர் வெப்பத்தைக் கூட்டி
வந்தபின் குளிர்ச்சி தருகின்றாயே!
ஏழைகளுக்கு நீ ஏசி!
எங்களுக்குக் கடவுள் தந்த ஆசி!

**வர்ஷிணி 4HT1**